O.S.No. 181/2016
02.03.2020

வா.சா.3..திரு. கருப்பன்,த.பெ.பம்பையன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.
1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை .

தாவா சொத்தின் புல எண் என்ன என்றால் தெரியாது, நான் படிக்காதவன். அதன் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் ½ செண்டிற்குள் இருக்கும். வாதி எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் தான் புழங்கும் ½ செண்ட் இடத்திற்காக வழக்கு போட்டுள்ளார். அந்த சொத்தின் நான்கு மால் என்ன என்றால் தெரியும், கிழக்கே என்ன என்றால் ரோடு உள்ளது, மேற்கே என்ன என்றால் சோனை வீடு உள்ளது, வடக்கே என்ன உள்ளது என்றால் ஊமச்சாமி, சுப்பையா, சேது ஆகியோர் வீடு உள்ளது, தெற்கு பக்கம் என்ன உள்ளது என்றால் கோவிலுக்கு செல்லும் ரோடு உள்ளது. தாவா சொத்திற்கு மேற்கூறிய நான்கு மால் கிடையாது என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தின் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் அது நத்தம் புறம்போக்கு இடம், யார் பெயரிலும் பட்டா வழங்கப்படவில்லை. தாவா சொத்திற்கு 1ம் பிரதிவாதி கருப்பசாமி பெயருக்கு பட்டா உண்டு என்றால் கிடையாது, கருப்பசாமி தாவா சொத்தை அனுபவம் செய்யவில்லை. தாவா சொத்தை 2010ம் வருடத்தில் பிரதிவாதிகள் கிரயம் வாங்கினார்கள் என்றால் தெரியாது. வழக்கு விவரம் தெரியாது என்றாலும், வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் வழக்கு விவரம் தெரியும், வாதி, பிரதிவாதி இரண்டு பேரும் எனக்கு வேண்டப்பட்ட நபர்கள்தான், வாதிக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன். வாதி, பிரதிவாதிகளுக்கு இடையே பிரச்சினை ஏற்பட்டு வாதி, பிரதிவாதி மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் தெரியாது. அந்த புகார் பற்றி எனக்கு தெரியும் என்றாலும், நானும் அந்த விசாரணைக்கு சென்றேன் என்றாலும் சரியல்ல. தாவா இடம் காலி இடமாகத்தான் உள்ளது என்றால் சரிதான், அதை பிரதிவாதிதான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல, செவலை தான் அனுபவித்து வருகிறார். தாவா சொத்து நத்தம் புறம்போககு என்று எவ்வாறு சொல்கிறேன் என்றால் அந்த இடம் முழுவதும் நத்தம் புறம்போக்குதான், என் இடமும் நத்தம் புறம்போக்கில் தான் உள்ளது.

மறுவிசாரணை இல்லை.